**Source:** *Tamil Murasu*, p2
**Date:** 10 March 2021

# 12 நாள்களுக்குப் பின் நோயெதிர்ப்பு செல்கள்

ஃபைசர்-பயோஎன்டெக் முதல் தடுப்பூசியைப் போட்டுக்கொண்ட 12 நாள்களில் இருந்து, கொவிட்-19 தொற்றுக்கு எதிரான குறிப்பிட்ட வகை நோயெதிர்ப்புப் பொருள்களும் செல்களும் உடலில் உருவாக அத்தடுப்பூசி உதவும் என்பதை சிங்கப்பூர் ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

95% செயல்திறன் கொண்ட அத்தடுப்பூசியை மூன்று வார இடைவெளியில் இரு முறை போட்டுக்கொள்ள வேண்டும்.

முன்னதாகவே உருவாகும் நோயெதிர்ப்புப் பொருள்களாலும் 'டி-செல்கள்' எனும் குறிப்பிட்ட வகை நோயெதிர்ப்பு செல்களாலும் இந்தப் பாதுகாப்பு கிடைக்கிறது என்று சிங்கப்பூர் பொது மருத்துவமனை மற்றும் டியூக்-என்யுஎஸ் மருத்துவப் பள்ளியைச் சேர்ந்த ஆய்வாளர்கள் குழு கண்டுபிடித்து இருக்கிறது.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.